**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 383/2025**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவீன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அலெக்ஸாண்டர் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 26 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 09.04.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.03.2023ம் தேதி, இரவு 22.30 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரி தமிழ்ச்செல்வன் என்பவரை என் முன்பும், தமிழரசன் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால்

தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த சட்டை, அரிவாள், கம்பு மற்றும் இருசக்கரவாகனம் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 27.03.2023 அதிகாலை 00.15 மணிக்கு எதிரி வீட்டில் மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த சட்டை, அரிவாள், கம்பு மற்றும் இருசக்கரவாகனம் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், தமிழரசன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.11 12:52:02 +0530